www.lkedu.lk

Smart Flex வெளியீடு

Smart Flex

தொடர் - 01

தரம் 05
புலமைப் பரிசில் பரீட்சை
நுண்ணறிவு வினாத்தாள் 01

M.P.KAJAN - MODEL PAPERS

M.P.KAJAN - MODEL PAPER
M.P.KAJAN - MODEL PAPER
M.P.KAJAN - MODEL PAPER
M.P.KAJAN - MODEL PAPER

சுட்டெண் :..... 45 நிமிடங்கள்

1. ஒவ்வொரு திங்கட்கிழமையும் பாடசாலைக் காலைக்கூட்டத்தில் மாணவத்தலைவன் உரை நிகழ்த்துவது வழக்கம். கடைசித்திங்கள் அன்று காலைக்கூட்டத்தில் உரை நிகழ்த்தியவர் மதுரன் ஆவார். மதுரன் இன்னும் ஐந்து வாரங்களின் பின் உரை நிகழ்த்த வேண்டும். கடைசித்திங்கட்கிழமை யூன் 17ம் திததியாக இருந்ததால் அடுத்து அவன் காலைக்கூட்டத்தில் உரை நிகழ்த்த வேண்டிய திகதியாதாக இருக்கும்.
   1) யூலை 22 2) யூலை 12 3) யூன் 30

2. 3m நீளமும் 5m உயரமும் உள்ள சுவருக்குப் பூச 3ℓ பூச்சு தேவைப்படுகின்றது. 6m நீளமும் 5m உயரமும் உள்ள அத்தகைய ஒரு சுவருக்கு பூச எத்தனை லீற்றர் பூச்சு தேவைப்படும்?
   1) 1 ℓ 2) 6 ℓ 3) 2 ℓ

3. 12 மாடு 12 சாக்குப்புல்லை 12 நாட்களில் சாப்பிடும் எனின் 2 மாடு 6 சாக்குப்புல்லை எத்தனை நாட்களில் சாப்பிடும்?
   1) 72 2) 48 3) 36

4. விதுசனின் வயதின் அரைவாசி மதுவின் வயது. மதுவின் வயதின் அரைவாசி தமிழனின் வயது. மூவரினதம் வயதுகளின் கூட்டுத்தொகை 140 எனின் விதுசனின் வயது யாது?
   1) 20 2) 80 3) 40

5. பிறந்தநாள் வாழ்த்து ஒன்று வானொலியில் ஒலிபரப்ப முதல் 30 சொற்களுக்கும் 200 ரூபாவும் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 3 வீதம் அறவிடப்படுகின்றது. 48 சொற்களுக்கு எவ்வளவு பணம் தேவை?
   1) ரூபாய் 230 2) ரூபாய் 254 3) ரூபாய் 484

6. 2011ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை ஆகும். 2011 ம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ம் திகதி என்ன கிழமை?
   1) ஞாயிறு 2) செவ்வாய் 3) திங்கள்

7. கார்த்திக் திங்கட்கிழமை ஞாயிற்றுக் கிழமையிலும் பார்க்க இருபது தேங்காய்கள் கூடுதலாகவும் செவ்வாய்க் கிழமை திங்கட்கிழமையிலும் 10 தேங்காய் கூடுதலாகவும் விற்றால் செவ்வாய்க்கிழமை விற்ற தேங்காய்களின் எண்ணிக்கை 85 எனின் மூன்று நாட்களிலும் விற்ற தேங்காய்களின் எண்ணிக்கை யாது?
   1) 200 2) 215 3) 230

M.P.Kajan - Teacher @leading National School in Colombo, 070 68 68 680

நேரடி வகுப்புக்கள் நடைபெறுமிடங்கள் Valaham - Wellawatte, Rajeswary Institute - Kotahena

LEARN EASY
KNOWLEDGE IS POWER

zoom
வகுப்புக்கள்

Grade 1 - A/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala

Learn Easy வெளியீடு

புலமைவளரி

இலக்கை நோக்கி

Call: 76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

www.lkedu.lk


8. சசி 2003ஆம் ஆண்டு மாசி மாதம் 6 ஆம் திகதி பிறந்தான். 2012ஆம் ஆண்டு மாசி மாதம் 6ஆம் திதது சசியிற்கு எத்தனை வயதாகும்?
   1) 8 2) 9 3) 10

9. ஒரு விழா ஒன்றில் நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் 8நிமிட நேரம் நடைபெற்றது. 8ஆவது நிகழ்ச்சி பி.ப 4.50க்கு ஆரம்பித்தது எனின் முதலாவது நிகழ்ச்சி ஆரம்பித்த நேரம் யாது?
   1) பி.ப 03.46 2) பி.ப 03.42 3) பி.ப 03.54

10. மதுரா தரம் - 05 இல் கற்கும் போது எனது வயது 13 ஆகும். நான் க.பொ.த சாதாரணதரப் பரீட்சை எழுதும் போது மதுரா எத்தனையாம் தரத்தில் படிப்பாள்?
   1) தரம் 7 2) தரம் 8 3) தரம் 9

11. 175, 125, 141, 132 என்னும் எண்களை ஏறுவரிசையில் எழுதும் போது கிடைக்கும் முதலாம் எண்ணினதும் மூன்றாம் எண்ணினதும் நடுவில் இருக்கும் இலக்கங்கள் முறையே,
   1) 2,3 2) 2,4 3) 7,4

12. S, T, V எனும் மூன்றுபேர் தமக்கிடையே இனிப்புக்களைப் பங்கிட்டுக் கொண்டனர். S உம் T உம் பெற்றது T உம் V உம் பெற்றதிலும் குறைவு. S உம் T உம் பெற்றது S உம் V உம் பெற்றதிலும் குறைவு. மூவரிலும் அதிக இனிப்புக்களைப் பெற்றவர் யார்?
   1) S 2) T 3) V

13.  உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?
   1) 12 2) 13 3) 15

14. மாலா பாடசாலையில் இடம்பெற்ற அலகுப் பரீட்சைகளில் முதலாவது பரீட்சையில் 15 புள்ளிகளுக்கு 6 புள்ளிகளையும், இரண்டாவது பரீட்சையில் 30 புள்ளிகளுக்கு 16 புள்ளிகளையும், மூன்றாவது பரீட்சையில் 10 புள்ளிகளுக்கு 5 புள்ளிகளையும் பெற்றாள். எனவே மாலா கூடுதலான புள்ளிகளைப் பெற்றது எத்தனையாவது பரீட்சையில் ஆகும்?
   1) 1 வது பரீட்சை 2) 2 வது பரீட்சை 3) 3 வது பரீட்சை

15. ஐந்து நாட்களிலும் பாடசாலை நடைபெறும். ஒரு வாரத்தில் அடுத்துவரும் மூன்று நாட்களில் கமலால் பாடசாலைக்கு வரமுடியவில்லை இக்கூற்றுக்கேற்ப கமலால் சந்தேகமின்றிப் பாடசாலைக்கு வராத ஒரு நாள்
   1) வெள்ளிக்கிழமை 2) வியாழக்கிழமை 3) புதன்கிழமை

16. போத்தல் ஒன்றினுள் 850***ml*** நீர் உள்ளது. போத்தலினுள் மேலும் 750***ml*** நீரை கவனமாக ஊற்றும் போது 100***ml*** நீர் போத்தலில் இருந்து வெளியேறியது. எனின் போத்தல் கொள்ளும் நீரின் அளவு யாது?
   1) 2***l*** 2) 1.5***l*** 3) 2.5***l***

17. ஒவ்வொன்றும் 60cm நீளமான 10 கயிற்றுத்துண்டங்கள் உள்ளன. அத்துண்டங்கள் அனைத்தும் 10cm அளவினை பயன்படுத்தி முடிச்சுகள் இடப்பட்டு ஒரு நீளமான கயிறாக மாற்றப்படுகின்றது. அவ்வாறு மாற்றியபின் கயிற்றின் நீளம் யாது?
   1) 420cm 2) 500cm 3) 330cm

M.P.Kajan - Teacher @leading National School in Colombo, 070 68 68 680

நேரடி வகுப்புக்கள் நடைபெறுமிடங்கள் Valaham - Wellawatte, Rajeswary Institute - Kotahena

www.lkedu.lk

18. தரன், லவன், விஸ்வா ஆகிய மூன்று நண்பர்களதும் தங்கைகள் மூவரும் மாலினி, அனித்தா, விதுசா ஆவர். அனித்தாவுடன் தரனின் தங்கை அமர்ந்திருந்தார். லவனின் தங்கை மாலினி எனின், விஸ்வா இன் தங்கை யார்?
    1) மாலினி 2) அனித்தா 3) விதுசா

19. ஒரு பூஞ்செடியில் ஒரு நாள் நான்கு பூக்கள் பூக்கும் அதே வேளை ஒரு பூ வாடி செடியிலிருந்து கீழே விழுகிறது எனின் அச்செடியில் எத்தனையாவது நாள் 28 பூக்கள் பூத்துக் காணப்படும்?
    1) 10ஆவது நாள் 2) 8ஆவது நாள் 3) 9ஆவது நாள்

20. 25 வினாக்கள் கொண்ட ஒரு வினாத்தாளில் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தால் 100 புள்ளிகள் கிடைக்கப்பெறும். ஒரு வினாவிற்கு விடையளித்தால் 4 புள்ளிகள் கிடைக்கப்பெறுவதுடன் பிழையாக விடையளித்தால் பெற்ற புள்ளியில் இருந்து 2 புள்ளிகள் கழிக்கப்படும் எனின் சரத் எனும் மாணவன் 64 புள்ளிகளைப் பெற்றானாயின் அவன் எத்தனை வினாக்களுக்கு சரியாக விடையளித்திருப்பான்?
    1) 18 2) 14 3) 19

21. ஒரு ஆசிரியர் தனது வகுப்பில் உள்ள 27 மாணவர்களுக்கும் பென்சிலினைப் பரிசாக வழங்க விரும்பி ஆண் பிள்ளைகளுக்கு ரூபாய் 5.00 பெறுமதியான பென்சில்களையும், பெண் பிள்ளைகளுக்கு ரூபாய் 3.00 பெறுமதியான பென்சில்களையும் வழங்கினார். அவர் கொடுத்த பென்சில்களின் மொத்தப்பெறுமதி ரூபாய் 105.00 எனின், அவ்வகுப்பிலுள்ள ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை எத்தனை?
    1) 13 2) 15 3) 12

22. கதிர் தனக்குரிய வேலைகளை உரிய நேரத்திலே செய்வதில் ஆர்வம் இல்லாதவன். பல்வேறு காரணங்களைக் கூறி அவ்வேலைகளைச் செய்யாமல் இருப்பான் அல்லது அவ்வேலைகளைத் தாமதித்தே செய்யும் பழக்கம் உள்ளவன். கதிரைக் குறிப்பிடப் பொருத்தமான சொல்
    2) சுறுசுறுப்பானவன் 2) சோம்பேறி 3) தியாகி

23. ஒரு மாதத்தின் 10ஆவது நாள் திங்கட்கிழமைக்கு முந்திய நாள் வருகின்றது. அம் மாதத்தின் இரண்டாவது நாள் என்ன கிழமை?
    1) சனி 2) வெள்ளி 3) வியாழன்

24.

90			38

பெட்டியிலுள்ள இரு வெற்றிடங்களிலும் வரவேண்டிய இரு எண்களில் ஒன்று மற்றையதன் 3 மடங்காக உள்ளது. அந்த நான்கு எண்களினதும் கூட்டுத்தொகை இருநூறு ஆகும். வெற்றிடங்களில் இருக்க வேண்டிய எண்கள் யாவை?
    1) 16,48 2) 18, 54 3) 17, 57

25. எனது அக்கா ஒரு படத்தைக்காட்டி இப்படத்தில் இருப்பவர் எனது அம்மாவின் அண்ணா என்று கூறினாள். ஆகவே படத்தில் இருப்பவர் எனக்கு என்ன உறவு முறை?
    1) அண்ணா 2) பெரியப்பா 3) மாமா

M.P.Kajan

M.P.Kajan - Teacher @leading National School in Colombo, 070 68 68 680

நேரடி வகுப்புக்கள் நடைபெறுமிடங்கள் Valaham - Wellawatte, Rajeswary Institute - Kotahena

www.lkedu.lk

26. ஒவ்வொரு பாத்தியிலும் ஒருவகை மாத்திரம் இருக்கத்தக்கதாக 5 பாத்திகளில் மரக்கறிப் பயிர்களும் பூச்செடிகளும் வளர்க்கப்படுகின்றன. பூச்செடிகள் வளர்க்கப்படும் பாத்திகளின் எண்ணிக்கை இரண்டு ஆகும். மரக்கறிப்பயிர்களும் பூச்செடிகளும் இருக்கத்தக்க விதத்தை தெரிவு செய்க.
    1) றோசா, செவ்வந்தி, முள்ளங்கி, அவரை, கோவா
    2) றோசா, செவ்வந்தி, அந்தூரியம், முள்ளங்கி, அவரை
    3) றோசா, முள்ளங்கி, அவரை, கோவா, கரட்

27. அம்மாவின் வயது எனது வயதைவிட நான்கு மடங்காகும். அப்பா அம்மாவைவிட மூன்று வயது மூத்தவராவார். அப்பாவின் வயது 35 எனின் எனது என்ன?
    1) 10 வயது 2) 8 வயது 3) 12 வயது

28. மின்சாரக் கம்பி ஒன்றின் நீளம் 75m ஆகும். அக்கம்பி இரு துண்டுகளாக வெட்டப்பட்டது. அதில் ஒரு துண்டு மற்றைய துண்டிலும் பார்க்க இரு மடங்கு நீளமானதாகும். எனின் நீளம் கூடிய துண்டின் நீளம்?
    1) 25 cm 2) 37.5 m 3) 50 m

29. வாணி சந்தையிலிருந்து 21 மரக்கறிப்பொதிகளை வீட்டிற்கு எடுத்து வரவேண்டியிருந்தது. ஆனால் ஒரு தடவையில் 5 பொதிகளையே எடுத்து வரமுடியும் எனின் எல்லாப் பொதிகளையும் எடுத்துவர எத்தனை தடவைகள் செல்ல வேண்டும்?
    1) 4 தடவைகள் 2) 5 தடவைகள் 3) 6 தடவைகள்

30. ஓர் அதிசய அறையிலே மூன்று கால் குதிரைகளும் நான்கு கால் யானைகளுமாக 36 நின்றன. அவற்றின் கால்களின் எண்ணிக்கை 129 எனின் அங்குள்ள மூன்று கால் குதிரைகள் எத்தனை?
    1) 16 2) 21 3) 15

M.P.Kajan

www.lkedu.lk

Smart Flex வெளியீடு

தொடர் - 02

தரம் 05
புலமைப் பரிசில் பரீட்சை
நுண்ணறிவு வினாத்தாள் 01

Smart Flex

M.P.KAJAN - MODEL PAPERS

M.P.KAJAN - MODEL PAPER
M.P.KAJAN - MODEL PAPER
M.P.KAJAN - MODEL PAPER
M.P.KAJAN - MODEL PAPER

சுட்டெண் :..... 45 நிமிடங்கள்

1. ஒரு வரிசையின் இறுதியிலிருந்து இரண்டாவதாகவும் தொடக்கத்தில் இருந்து இருபதாகவும் சுயி நின்றான் எனின், நடுவில் நிற்பவர் எத்தனையாவதாக நிற்பார்?
   1. 9 2. 10 3. 11

2. ஒரு கதைப்புத்தகத்தில் 18,19,20,30,31,32,76 ஆகிய பக்கங்களை காணமுடியவில்லையாயின் எத்தனை தாள்கள் காணாமல் போயிருக்கும்?
   1. 4 2. 5 3. 7

3. ஒரு பெட்டியில் உள்ள பழங்களில் 1 தடவையில் 10 பழங்களை எடுக்கும் வேளையில் 3 பழங்கள் பழுதடைந்திருக்கும். அவ்வாறு பழுதடைந்த பழங்கள் 18 எனின் பெட்டியில் ஆரம்பத்தில் இருந்த பழங்கள் எத்தனை?
   1. 13 2. 28 3. 60

- விளையாட்டுப்போட்டி ஒன்றில் கலந்து கொண்ட 100 வீரர்களுள் 60 மாணவர்கள் நீல நிற கொடியை பிடித்துக்கொண்டும் 80 வீரர்கள் பச்சைநிற கொடியை பிடித்துக்கொண்டும், சில வீரர்கள் 2 நிற கொடிகளை பிடித்துக்கொண்டும் மைதானத்தில் நின்றனர்.

4. நீல நிறக்கொடியை மாத்திரம் பிடித்துக் கொண்டு நின்ற வீரர்களின் எண்ணிக்கை எத்தனை?
   1. 20 2. 30 3. 10

5. இரண்டு நிற கொடிகளையும் பிடித்துக் கொண்டு நின்ற வீரர்களின் எண்ணிக்கை எத்தனை?
   1. 30 2. 20 3. 40

6. நான் ஓர் ஆணாவேன். எனது தங்கைக்கு மூன்று சகோதரனும் இரண்டு சகோதரியும் உள்ளனர் எனின்,
   1. ஆண்களினதும் பெண்களினதும் எண்ணிக்கை சமன்
   2. பெண்களை விட ஆண் சகோதரர்கள் ஒன்று கூடியவராவர்
   3. பெண்களை விட ஆண் சகோதரர்கள் ஒன்று குறைந்தவர்கள்

7. மனிதர்கள் அனைவரும் நல்லவர்கள், அதனால் கடவுளாகப் போற்றப்படுகின்றனர். எனின் இதனை ஒழுங்குபடுத்தினால் அமைவது,
   1. மனிதர் - கடவுள் - நல்லவர்
   2. நல்லவர் - மனிதர் - கடவுள்
   3. மனிதர் - நல்லவர் - கடவுள்

www.lkedu.lk

8. தை, மாசி, பங்குனி - ¼ , சித்திரை, வைகாசி, ஆனி - ½ எனின் ஆடி, ஆவணி, புரட்டாதி……..
   1. ¾ 2. 1 3. ½


9. மாசி மாதம் 10 ஆம் திகதி ஆரம்பித்த பொருட்காட்சி ஒன்று 8 நாட்கள் நடைபெற்று முடிவுற்ற தினம்,
   1. 17 ஆம் திகதி 2. 18 ஆம் திகதி 3. 19 ஆம் திகதி


10. 2020 ஆம் ஆண்டின் ஜனவரி 1 ஆம் திகதி புதன் கிழமை எனின் டிசம்பர் 29 ஆம் திகதி என்ன கிழமை?
    1. வியாழன் 2. புதன் 3. செவ்வாய்

11. சிகரம் - 1234 எனவும் இராகம் - 5624 எனவும் குறிக்கப்பட்டிருப்பின் தியாகம் என்பது குறித்து நிற்பது,
    1. 1324 2. 7824 3. 7124

12. ஒரு வகுப்பிலுள்ள 36 மாணவர்களில் பன்னிரண்டு பேர் பெண்பிள்ளைகள் எனின் வகுப்பிலுள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் பெண் பிள்ளைகளைக்குறித்துக் காட்டும் உரு எது?


1.


2.


3.

13. ஒருவர் 2011ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதியில் இருந்து மார்ச் மாதம் 3 ஆம் திகதி வரை பரீட்சையொன்றை எழுதினார். எனின் அவர் எத்தனை நாட்கள் பரீட்சையைச் செய்தார்?
    1. 6 2. 7 3. 5

14. இரண்டு வருடங்களுக்கு முன்பு அபியின் தாயின் வயது 36 வருடங்கள் ஆகும். அப்போது அபியின் தாயின் வயது அபியின் வயதின் வயதின் மூன்று மடங்காகும் எனின் இன்னும் மூன்று ஆண்டுகளின் பின் இருவரின் வயதுகளின் கூட்டுத் தொகை யாது?
    1. 58 2. 56 3. 41

15. கணிதப் பரீட்சை ஒன்றில் அபினாஸ் 22 வினாக்களுக்கு மட்டுமே சரியான விடை எழுதி 64 புள்ளிகளை பெற்றான். வினாக்கள் சிலவற்றிற்கு 2 புள்ளிகளும் சிலவற்றிற்கு 4 புள்ளிகளும் வழங்கப்பட்டன. எனின் அபினாஸ் சரியாக விடை எழுதிய 2 புள்ளிகளுக்குரிய வினாக்கள் எத்தனை?
    1. 12 2. 10 3. 11

16. ஒரு பெரிய கட்டடம் ஒன்றைக் கட்டி முடிக்க முதல் கட்டம் 14 மாதங்களும் இரண்டாம் கட்டம் 12 மாதங்களும் எடுக்கின்றது. கட்டடமானது 2017ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. எனின் எந்த ஆண்டில் முடிவடையும்?
    1. 2019 2. 2020 3. 2018

17. அமல் 150 முறை துள்ளும் போது விமல் 200 முறை துள்ளுவான். விமல் 100 முறை துள்ளும் போது கமல் 80 முறை துள்ளுவான் எனின் இங்கு வேகம் குறைவாக துள்ளுபவர் யார்?
    1. விமல் 2. கமல் 3. அமல்

18. தற்போது ஆர்யாவின் வயது அவனது அம்மாவின் வயதின் 1/4 பங்கு ஆகும். அம்மாவுக்கு இப்போது வயது 36 எனின் ஆர்யா பிறக்கும் போது தாயின் வயது என்ன ?
    1. 27 2. 30 3. 26

M.P.Kajan - Teacher @leading National School in Colombo, 070 68 68 680


www.lkedu.lk

19. பாடசாலை சிற்றூண்டிச்சாலை காலை 8 மணிக்கு திறக்கப்பட்டும். அச்சிற்றூண்டிச்சாலையை நடாத்துபவர் 9ℓ நீர் கொள்ளக்கூடிய வெற்றுப்பானையில் மணித்தியாலத்திற்கு ஒரு தடவை 3ℓ நீரை ஊற்றுவார். ஓவ்வொரு மணித்தியாலத்திலும் மாணவர்கள் 1ℓ வீதம் நீரை குடிப்பதற்கு எடுத்து விடுவார்கள். கடைக்காரர் எத்தனை மணிக்கு ஊற்றும் பொழுது முதன்முதலாக நிரம்பிக் காணப்படும்?
    1. 12 மணி 2. 11மணி 3. 1 மணி

20. இரண்டு கிழமைக்கொருமுறை வரும் வெள்ளிக்கிழமை நாட்களில் அண்ணண் வீட்டுக்கு வருவான். 2016 பெப்ரவரி 24ஆம் திகதி அண்ணண் வீட்டுக்கு வந்தான் எனின் அடுத்து எப்போது வீடு வந்திருப்பான் ?
    1. மார்ச் 9 2. மார்ச் 10 3. மார்ச் 11

21. அப்பாவும் நானும் புத்தகங்கள் வாங்குவதற்காக ரூபா 450 ஐச் செலவு செய்தோம். நான் செலவு செய்த பணத்தினை விட இரு மடங்கு அப்பா செலவு செய்தார் எனின் நான் செலவு செய்த தொகை யாது ?
    1. ரூபா 75 2. ரூபா 150 3. ரூபா 100

22. மாணவன் ஒருவன் A என்ற இடத்திலிருந்து சூரியன் மறையும் திசை நோக்கி 10m நடந்த பின்னர் தனது வலது பக்கமாக திரும்பி நடந்து பின்னர் சூரியன் உதிக்கும் திசைநோக்கி 20m நடந்து B அடைந்தான். அவனின் பயணப்பாதையை சரியாக காட்டுவது?



23. மூன்று பாடங்களில் நான்கு மாணவர்கள் பெற்ற புள்ளிகளை அருகிலுள்ள அட்டவணை காட்டுகின்றது.

	கரன்	ரதன்	சுதன்	மதன்
தமிழ்	S	D	D	S
கணிதம்	D	D	D	C
சுற்றாடல்	C	C	S	D

நான்கு மாணவர்களுள் திறமையான மாணவன் யார்?
D – சிறப்பு, C – சராசரி, S - குறைவு
    1. ரதன்
    2. மதன்
    3. சுதன்

24. பணம், ஐந்து ரூபாய் நாணயக்குற்றி, 50 ரூபாய், பென்சில் என்பதனை விபரிக்கும் படம் எது?



25. எலிக்கு வளை எனின் கிளிக்கு : .....
    1. கூடு 2. பொந்து 3. மரக்கிளை


www.lkedu.lk


26. ஒரு மரம் ஒன்றில் மாடு ஒன்று கட்டப்பட்டுள்ளது. மரத்திற்கும் அம்மாட்டுக்கும் இடையிலான கயிற்றின் நீளம் 48m ஆகும். மரத்தினுடைய சுற்றி வரும் அளவு 3 m ஆகும். மாடு மரத்தினை சுற்றி மேயும் பொழுது மரத்தில் கயிறானது 2முறை சுற்றப்பட்டுவிட்டது. இப்பொழுது மாட்டிற்கும் மரத்திற்கும் இடையிலான கயிற்றின் நீளம் யாது?

1. 38 m 2. 40 m 3. 42 m

27. ஒரு பக்கத்தில் 10 தூண்கள் கொண்ட சதுர வடிவ மண்டபம் ஒன்றில் ஓர் இடைவெளியில் இரண்டு சிவப்பு நிற பூக்களுக்கு நடுவில் ஒரு மஞ்சள் நிறப்பூ கட்டப்பட்டது எனின், அம்மண்டபத்திலுள்ள சிவப்பு, மஞ்சள் நிற பூக்கள் முறையே,

1. 80, 40 2. 72, 36 3. 60, 30

28. இரும்பு ஒட்டும் தொழிற்சாலை ஒன்றில்  இவ்வடிவத்தை ஒட்டுவதற்கு ரூபா 50 கூலியாக கேட்கப்பட்டது. கீழே தரப்பட்ட வடிவத்தை ஒட்டுவதற்கு எவ்வளவு கூலி தேவை?



1. 500 2. 225 3. 400

29. 

சில்லு A ஆனது ஒரு தடவை சுழலும் போது சில்லு B ஆனது 7 தடவைகள் சுழலும். எனவே சில்லு B ஆனது 63 சுழலும் போது சில்லு A ஆனது சுழலும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

1. 9 2. 8 3. 7

30. வாகனதரிப்பிடம் ஒன்றிலுள்ள மோட்டார் கார்களினதும் மோட்டார் சைக்கிள்களினதும் எண்ணிக்கை 58 ஆகும். அவற்றின் சக்கரங்களின் எண்ணிக்கை 156 ஆகும் எனின் வாகன தரிப்பிடத்திலுள்ள மோட்டார் கார்களின் எண்ணிக்கை யாது?

1. 20 2. 38 3. 40

www.ikdu.lk

Smart Flex வெளியீடு

தொடர் - 3

தரம் 05
புலமைப் பரிசில் பரீட்சை
நுண்ணறிவு வினாத்தாள் 01

M.P.KAJAN - MODEL PAPERS

Smart Flex

சுட்டெண் :..... 45 நிமிடங்கள்

எல்லா வினாக்களுக்கும் சரியான விடையை தெரிவு செய்க

01. பண்ணை ஒன்றில் உள்ள முயல்களினதும், புறாக்களினதும் மொத்த எண்ணிக்கை 16 ஆகும். அவற்றின் கால்களின் எண்ணிக்கை 52 ஆகும். எனின் அங்குள்ள புறாக்கள் எத்தனை?
1) 6 2) 05 3) 10

02. பாடசாலை நிகழ்வொன்றில் பச்சை, மஞ்சள், சிவப்பு என்ற ஒழுங்கில் 34 கொடிக்கம்பங்கள் நடப்பட்டிருந்தன. எனின் 34ஆவதாக நடப்பட்டிருந்த கொடிக்கம்பத்தின நிறம் என்ன?
1) சிவப்பு 2) பச்சை 3) மஞ்சள்

03. ஜனவரி மாதம் 1ஆம் திகதி வெள்ளி எனின், அம்மாதத்தில் இடம்பெறும் வியாழக்கிழமைகளினதும், வெள்ளிக்கிழமைகளினதும் எண்ணிக்கை முறையே,
1) 4, 5 2) 5, 4 3) 5, 5

04. பிரசாத், கேசவனின் தந்தையாவார். பிரகாஷ், பிரசாத்தின் தம்பியாவார். நிவேதிகா கேசவனின் ஒரே அக்கா ஆவார். நிவேதிகாவுக்கும் பிரகாஷ் இற்கும் இடையிலான உறவுமுறை யாது?
1) பெறாமகள் - சித்தப்பா 2) மருமகள் - மாமா 3) பெறாமகள் - பெரியப்பா

- கண்ணனின் சகோதரி பார்வதி, பார்வதியின் தாயார் வேலம்மாள், தந்தை கணபதிப்பிள்ளை, கண்ணனுக்கு லதா என்ற பெண்பிள்ளையும், பார்வதிக்கு ரவி என்ற ஆண் பிள்ளையும், ரவிக்கு ரம்மியா என்ற தங்கையும் உண்டு.

05. ரம்மியாவுக்கு கணபதிப்பிள்ளை என்ன உறவு முறை?
1) மாமா 2) பாட்டன் 3) பெரியப்பா


06. ரவி லதாவை என்ன உறவுமுறை சொல்லி அழைப்பான்?
1) தங்கை 2) மைத்துனி 3) மாமி

07. ஒரு பெற்றோருக்கு மது இரண்டாவது பிள்ளையாகும். இவனது அண்ணனுக்கு இரு சகோதரர்களும், ஒரு சகோதரியும் உண்டு. மதுவின் குடும்பத்திலுள்ளவர்களின் எண்ணிக்கை யாது?
1) 3 2) 4 3) 6

08. 2009ஆம் ஆண்டில் 365 நாட்கள் உள்ளன. அவ்வாண்டில் 1ஆம் நாள் வியாழன் எனின், அவ்வாண்டில் எத்தனை வியாழக்கிழமைகள் உள்ளன?
1) 50 2) 52 3) 53

www.lkedu.lk

09.



1) 10 2) 8 3) 15

10. ஒரு மைதானத்தில் 11 கம்பங்கள் காணப்பட்டன. சில கம்பங்களில் இரண்டு கொடிகள் வீதமும் வேறு சில கம்பங்களில் மூன்று கொடி வீதமும் ஏற்றப்பட்டிருந்தன. ஏற்றப்பட்ட மொத்தக் கொடிகளின் எண்ணிக்கை 27 ஆகும். இரண்டு கொடிகள் ஏற்றப்பட்ட கம்பங்கள் எத்தனை?
1) 5 2) 6 3) 7

11. ஒரு மாணவன் ஓர் அட்டையில் கோடுகள் வரைந்து முக்கோணிகளையும், ஐங்கோணிகளையும் வெட்டினான். அவன் வெட்டிய மொத்த தளவடிவங்கள் 15 ஆகும். அவனால் வரையப்பட்ட கோடுகளின் மொத்த எண்ணிக்கை 57 ஆகும். அவன் வெட்டிய முக்கோணிகள் எத்தனை?
1) 6 2) 8 3) 9

- இராணி, சுதன், சீதா, இராமன் ஆகியோர் பரீட்சைக்குத் தோற்றினர்கள். இராமனை விட 5 புள்ளிகள் கூடுதலாக இராணி பெற்றதுடன் சீதா சுதனை விட 10 புள்ளிகள் குறைவாகப் பெற்றிருந்தாள். இராணியும் சீதாவும் சமமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

12. ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர் யார்?
1) சீதா 2) இராமன் 3) சுதன்


13. சீதா பெற்ற புள்ளிகளின் மொத்தம் 48 எனின் இராமன் பெற்ற புள்ளிகள் எத்தனை?
1) 43 2) 53 3) 56


14. ஒருவர் 50 வினாக்களைக் கொண்ட வாய்மொழி வினாப்போட்டியில் கலந்து கொள்கிறார். இவர் சரியாகப் பதிலளிக்கும் ஒரு வினாவுக்கு 2 புள்ளிகள் வழங்கப்படும். பிழையாகப் பதிலளிக்கும் ஒரு வினாவுக்குப் பெற்ற புள்ளியிலிருந்து ஒரு புள்ளி குறைக்கப்படும். எனின், 85 புள்ளிகளைப் பெறும் ஒருவர் எத்தனை வினாக்களுக்கு சரியான விடை அளித்திருப்பார்?
1) 40 2) 45 3) 43


15. மூன்று நபர்களின் பெயர்கள் ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்திக் குறியீட்டுமுறையாக BEAT, NEAT, SEAT என எழுதப்பட்டிருந்தன. இம்மூன்று நபர்களினதும் பெயர்கள் சரியாக எழுதப்பட்டுள்ள விடை யாது?
1) பரதன், வரதன், கந்தன் 2) அருணன், வருணன், கருணன் 3) மகேசன், சபேசன், கணேசன்


16. ஒரு பையில் இலக்கம் 3 எழுதப்பட்ட அட்டைகளும், இலக்கம் 4 எழுதப்பட்ட அட்டைகளுமாக 15 உள்ளன. இவ்விலக்கங்களின் கூட்டுத் தொகை 55 எனின் பையிலுள்ள இலக்கம் 4 எழுதப்பட்ட எத்தனை அட்டைகள் உள்ளன?
1) 5 2) 10 3) 11

17. இங்கு பயன்படுத்தப்பட்ட தாயக்கட்டைகளானவை நியம விதிகளுக்கு உட்பட்ட உண்மையானவை ஆகும். அவை ஒன்றுடன் ஒன்று இருக்குமாறு ஒட்டப்பட்டன. இங்கு A, B ஆகியவற்றின் எதிர்ப்பக்கங்களாக இருக்கக்கூடிய புள்ளிகள் எவை?









M.P.Kajan

www.lkedu.lk


18. 5 மீற்றர் நீளமும், 3 மீற்றர் அகலமும், 4 மீற்றர் உயரமும் கொண்ட பெட்டியில் உள்ளே ஒரு மீற்றர் அகலமும், ஒரு மீற்றர் நீளமும், ஒரு மீற்றர் உயரமும் கொண்ட எத்தனை பெட்டிகளை அடுக்கலாம்?
1) 40 2) 30 3) 60

19. மோகனும் ரவியும் ஒரு வட்ட ஓட்டப் பந்தயப்பாதையில் ஓட்டத்தை ஆரம்பித்தனர். ரவி அரைச்சுற்று ஓடும் போது மோகன் ஒரு சுற்றை ஓடி முடித்து முன்னோக்கி வந்து ரவியைக் கடந்தான் இதற்கேற்ப,
1) மோகனின் கதி ரவியின் கதியின் மூன்று மடங்காகும்.
2) மோகனின் கதி ரவியின் கதியின் இரண்டு மடங்காகும்
3) ரவியின் கதி மோகனின் கதியின் மூன்று மடங்காகும்

20. கொவிட் தடுப்பூசி ஏற்ற ஆண்களும் பெண்களும் மாறி மாறி இருக்கும் விதத்தில் ஒரு வரிசையில் இருந்தனர். வரிசையின் முதலில் ஓர் ஆண் இருந்தார் வரிசையின் இறுதியில் 8 பெண்களும் அருகருகே இருந்தனர். வரிசையில் இருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 53 எனின் அங்கு இருந்த ஆண்கள் எத்தனை?
1) 22 2) 23 3) 24

21. மூன்று மரங்களில் உள்ள பறவைகளின் எண்ணிக்கை 46,47,48 ஆகும். அவற்றுள் ஒரு மரத்தில் ஆண் பறவைகளின் எண்ணிக்கையை விட ஐந்து பெண் பறவைகள் கூடுதலாக உள்ளன. அந்த மரத்தில் உள்ள மொத்தப்பறவைகளின் எண்ணிக்கை யாது?
1) 46 2) 47 3) 48


22. எனது கடிகாரம் 10நிமிடம் பிந்தி ஓடுகின்றது. இக்கடிகாரம் மு.ப 11.55 ஐக்காட்டிய போது எனது தந்தை வீட்டிற்கு வந்தார். எனின் அவர் வந்த போது சரியான நேரம் எது?
1) மு.ப 11.45 2) மு.ப 12.15 3) பி.ப 12.05

23. 

தரப்பட்ட கோலத்தில் வரவேண்டிய எண்ணை தெரிவு செய்க.
1) 0 2) 1 3) 3

24. ஓர் ஆடையினை உலர்த்துவதற்கு 5 நிமிடங்கள் எடுக்கும் ஒரு மிகப்பெரிய சலவை இயந்திரத்தில் ஒரு நேரத்தில் 100 ஆடைகளையே உலர்த்த முடியும். அவ்வாறாயினும் 80 ஆடைகளை உலர்த்துவதற்கு எடுக்கும் நேரம் எவ்வளவு?
1) 400 நிமிடங்கள் 2) 40 நிமிடங்கள் 3) 5 நிமிடங்கள்

25. 
ரூபா 75.00


ரூபா 90.00


ரூபா 155.00


ரூபா 135.00





என்பவற்றை வாங்க எவ்வளவு பணம் தேவை?

1) 190.00 2) 210.00 3) 275.00

www.lkedu.lk


26. ஆரம்பப்பிரிவு பாடசாலை ஒன்றில் மாணவர்களுக்கு இரண்டு வடைகளுக்கு ஒரு வாழைப்பழம் வீதம் பரிமாறப்பட்டது. வடையும் வாழைப்பழமுமாக மொத்தம் 675 பரிமாற்றப்பட்டால் அன்றைய தினம் பாடசாலைக்கு வந்த மாணவர்கள் எத்தனை?

1) 225 மாணவர்கள் 2) 300 மாணவர்கள் 3) 175 மாணவர்கள்


27. பாமா 25m நீளமான சீத்தைத்துணி ஒன்றினை 1m அளவுடைய துண்டுகளாக வெட்டினாள். ஒரு துண்டை வெட்டுவதற்கு அவளுக்கு 30 செக்கன் நேரம் எடுத்தது. எனின் முழுத்துணியையும் வெட்டி முடிக்க அவள் எடுத்துக்கொண்ட மொத்த நேரம் யாது?

1) 24 நிமிடங்கள் 2) 12 ½ நிமிடங்கள் 3) 12 நிமிடங்கள்


28. பொருத்தமான உருவைத் தெரிவு செய்க



2)



1)



2)



3)

29. பாடசாலை ஒன்றில் கல்விக் கண்காட்சி 09ஆம் திகதி ஆரம்பித்து 17ஆம் திகதி வரை நடைபெற்றது. எனின் கல்விக் கண்காட்சி எத்தனை நாட்கள் நடைபெற்றது?

1) 8 நாட்கள் 2) 9 நாட்கள் 3) 10 நாட்கள்

30. சஜீஸ் கதைப்புத்தகம் ஒன்றில் 1ஆம் பக்கத்திலிருந்து 27ஆம் பக்கம் வரையும் வாசித்துவிட்டு முடிவை வாசிக்கும் ஆர்வத்தில் 45ஆம் பக்கத்தில் இருந்து 84ஆம் பக்கம் வரை வாசித்தான். எனின் அவன் வாசித்த பக்கங்கள் எத்தனை?

1) 67 பக்கங்கள் 2) 40 பக்கங்கள் 3) 68 பக்கங்கள்

- நேரடி வகுப்பிற்கு,

Valaham Institute in Wellawatte

Rajeswari Institute in Kotahena

- நிகழ்நிலை வகுப்பிற்கு,

Contact 070 68 68 680

M.P.Kajan

www.kedu.lk

Smart Flex வெளியீடு

தொடர் - 4

தரம் 05
புலமைப் பரிசில் பரீட்சை
நுண்ணறிவு வினாத்தாள் 01

M.P.KAJAN - MODEL PAPERS

Smart Flex

சுட்டெண் :..... 45 நிமிடங்கள்

எல்லா வினாக்களுக்கும் சரியான விடையை தெரிவு செய்க

1. A,B,C என்பவர்கள் முறையே ஒரு வேலையை ஆரம்பித்து ஒருவர் தொடங்கி முடிக்கும் நேரத்தில் மற்றவர் ஆரம்பித்து மூவருமாக 3மணித்தியாலங்கள் 35நிமிடத்தில் நிறைவு செய்தனர். A வேலையைத் தொடங்கி 45நிமிடத்தில் நிறைவு செய்தார். B 13:15 இற்கு வேலையை தொடங்கி 1மணித்தியாலம் 40 நிமிடம் வேலை செய்தார். C வேலையை நிறைவு செய்த நேரம் யாது?

   1) 16:05 2) 14:05 3) 14:55

2. 6 வருடங்களின் முன் தாயின் வயது மகளின் வயதைவிட 4 மடங்கும் 4வயதும் அதிகமாகும். தற்போது இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 66 எனின், 6வருடங்களின் முன் மகளின் வயது யாது?

   1) 12 வயது 2) 10 வயது 3) 15 வயது

3. நிதா ஒரு குறித்த நேரத்தில் ஒரு புத்தகத்தில் 63ஆம் பக்கத்திலிருந்து 92ஆம் பக்கம் வரை வாசித்தான். அவன் குறித்த நேரத்தில் வாசித்த பக்கங்கள் எத்தனை?

   1) 29 பக்கங்கள் 2) 30 பக்கங்கள் 3) 28 பக்கங்கள்

4. நாதனுக்கு 3 ஆண் சகோதரர்கள். அவனின் அக்காவிற்கு இரண்டு அண்ணாமாரும், குடும்பத்தில் ஒரு பெண்பிள்ளையாயின், அவனின் குடும்பத்திலுள்ள பிள்ளைகள் எத்தனை பேர்?

   1) 4பேர் 2) 5பேர் 3) 6 பேர்

5. கமலன் அரச வங்கியொன்றில் கடமை புரிகின்றார். அரச வங்கிகளுக்கு வார இறுதிநாட்களிலும் அரச பொதுவிடுமுறை நாட்களிலும் மாதமொரு கடமை நாள் விசேட லீவுமாகும். சித்திரை 1ஆந்திகதி ஞாயிறாக உடைய மாதத்தில் 4 பொதுவிடுமுறை நாட்களாகும். பொதுவிடுமுறை நாட்கள் கடமை நாட்களிலிலேயே வருகின்றன. கமலன் அம்மாதத்தில் வேலை செய்த நாட்கள் எத்தனை?

   1) 16 நாட்கள் 2) 14 நாட்கள் 3) 20 நாட்கள்

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkedu.lk

6. ஒரு வாகனத்தரிப்பிடத்தில் உள்ள உந்துருளிகளினதும் முச்சக்கரவண்டிகளினதும் சக்கரங்களின் மொத்த எண்ணிக்கை 75 ஆகும். இரு வாகனங்களும் சம எண்ணிக்கையில் உள்ளன எனின் வாகனங்களின் மொத்த எண்ணிக்கை யாது?


1) 10 2) 40 3) 30

7. ஒரு உண்டியலில் ரூபாய்5, ரூபாய்2 நாணயக் குற்றிகள் மட்டும் உள்ளன. அவற்றின் பெறுமதி ரூபாய் 43 ஆயின் உண்டியலில் இருக்கத்தக்க ரூபாய் 5 நாணயக் குற்றிகளின் அதிகபட்ச எண்ணிக்கை?

1) 8 நாணயக் குற்றிகள் 2) 7 நாணயக் குற்றிகள் 3) 5 நாணயக் குற்றிகள்


8. மதன் ஒருகுறித்த ஆண்டில் ஒவ்வொரு வியாழக்கிழமையும் தனது சித்தப்பா வீட்டிற்குச் சென்றிருந்தான். அவன் பெப்ரவரி மாதத்தில் ஐந்து தடவை சித்தப்பா வீட்டிற்கு சென்றிருந்தான். எனின், அவன் சென்ற ஆண்டாக அமையக்கூடியது?

1) 2015 2) 2016 3) 2017

9. 

▲ இதன் நிறை 125g ஆயின், தராசின் தட்டுக்களில் உள்ள பொருட்களின் மொத்த நிறை எவ்வளவு?

1) 1000g 2) 500g 3) 1500g


10. 

உரு A, உரு B ஆகியவற்றினைப் பற்றி கூறக்கூடிய கூற்று A, B

1) உருA யில் உருBயை விட அதிக முக்கோணிகளும் அதிக செங்கோண முக்கோணிகளும் உண்டு.
2) உருB யில் உருAயை விட அதிக முக்கோணிகளும் அதிக செங்கோண முக்கோணிகளும் உண்டு.
3) உருA யில் உருBயை விட அதிக முக்கோணிகளும் சமனான செங்கோண முக்கோணிகளும் உண்டு.

11. கரீம், ரவி ஆகிய இருவரின் வயதுகளின் கூட்டுத்தொகை 54 ஆகும். ரவியை விட கரீம் 8 மடங்கு அதிகமாக இருந்த போது ரவியின் வயது எத்தனை?

1) 5 வயது 2) 6 வயது 3) 7 வயது

12. 

இவ்வுருவின் உள்ளே உள்ள முக்கோணிகளின் கூட்டுத்தொகை யாது?

1) 10 2) 11 3) 12

M.P.Kajan

www.kedu.lk

13. 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி திங்கட்கிழமையாகும். அவ்வாண்டு மே மாதம் 15ம் திகதி என்னகிழமை?

    1) புதன் கிழமை 2) திங்கட்கிழமை 3) செவ்வாய்க்கிழமை

14. பிரனிக்காவும், சுமதியும் காலைவேளையில் உரையாடிக் கொண்டு இருக்கையில் பிரனிக்காவின் நிழல் வலதுகைப் பக்கத்திலும் சுமதியின் நிழல் இடதுகைப் பக்கத்திலும் காணப்பட்டது எனின் பிரனிக்காவும், சுமதியும் பார்த்துக் கதைத்துக் கொண்டிருக்கும் திசை யாது?

    1) தெற்கு, வடக்கு 2) கிழக்கு, மேற்கு 3) கிழக்கு, வடக்கு

15. இன்று புதக்கிழமையாகும். இதற்கு முந்தைய புதன் கிழமையிலிருந்து நாளை மறுநாள் வரை எத்தனை நாட்கள் ஆகும்.?

    1) 8 2) 9 3) 10

16. கதைப்புத்தகம் ஒன்றிலிருந்து ஒவ்வொரு கதையும் 18 பக்கங்களைக் கொண்டதாகும். புத்தகத்திலிருந்து மூன்றாவது கதை 58 ஆம் பக்கம் முடிவடைகிறது எனின், இரண்டாவது கதை முடிவடைவது எத்தனையாம் பக்கத்திலாகும்?

    1) 39 2) 40 3) 41

17. ஒரு குறித்த வருடத்தின் மார்ச் மாதத்தின் முதலாம் திகதி செவ்வாய்கிழமையாகும். அம்மாதத்தின் நடுவில் வரும் தினம் எது?

    1) வியாழன் 2) புதன் 3) சனி

18. வாகனபந்தயமொன்றில் சில மோட்டார்சைக்கிள்களும் சில கார்களும் கலந்து கொண்டன. கலந்து கொண்ட வாகன சக்கரங்களின் எண்ணிக்கை 60 ஆகும். அதே வேளை சாரதிகளின் எண்ணிக்கை 21 ஆகும். அதன் அடிப்படையில் பந்தயத்தில் பங்குபற்றிய கார்களின் எண்ணிக்கையும் மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கையும் முறையே.

    1) 12 கார், 9 மோட்டார்சைக்கிள்
    2) 9 மோட்டார்சைக்கிள், 12 கார்
    3) 9 கார், 12 மோட்டார்சைக்கிள்

19. ஒரு நகரம் ஒன்றில் காலை 10.30 மணியில் இருந்து பி.ப 3.45 வரை ஆட்டோக்களும், காலை 11.25 இருந்து பி.ப 4.00 மணி வரை மோட்டார்சைக்கிளும், நண்பகல் 12.10 முதல் 4.15 வரை துவிச்சக்கர வண்டிகளும் பயணித்தன. மூன்று வாகனங்களும் ஒரே நேரத்தில் பயணித்த காலம் எவ்வளவு?

    1) 3 மணித்தியாலம் 35 நிமிடங்கள்
    2) 3 மணித்தியாலம் 15 நிமிடங்கள்
    3) 2 மணித்தியாலம் 30 நிமிடங்கள்

20. வாளி ஒன்றில் 12 சிவப்புநிற பந்துகளும் 7 பச்சைநிற பந்துகளும் 11 வெள்ளைநிற பந்துகளும் இருந்தன. அவ்வாளியிலிருந்து ஒரு பச்சைநிற பந்தை பெறுவதற்கு ஆக குறைந்தது எத்தனை பந்துகளை வெளியே எடுக்க வேண்டும்?

    1) 24 தடவைகள் 2) 23 தடவைகள் 3)20 தடவைகள்

M.P.Kajan

www.lkedu.lk

21. ஒருவர் ஒளிப்படமொன்றினைப் பார்த்து பின்வருமாறு கூறினார். 'எனக்குச் சகோதரர்களோ, சகோதரிகளோ இல்லை எனினும் இவரது தந்தை எனது தந்தையின் மகனாவார்.' அவ்வாறெனின் ஒளிப் படத்தில் காணப்படுபவருக்கு அவர் என்ன உறவுமுறை?

1) தந்தை 2) மகன் 3) பாட்டன்

22. நான்கு இலக்கங்களைக் கொண்ட ஓர் எண் உள்ளது. அந்த எண்ணின் முதலாம் இலக்கம் நான்காம் இலக்கத்தின் மூன்று மடங்கு, இரண்டாம் இலக்கம் மூன்றாம் இலக்கத்தின் ஐந்து மடங்காகும். அவ்வெண் கீழ் தரப்பட்டுள்ள எண்களில் யாதாக இருக்கலாம்?

1) 6215 2) 6512 3) 6152

- ரூபா 135.70 என்பது R.QMS.KR என்பதாலும் ரூபா 478.50 என்பது R.YKN.SR என்பதாலும் ரூபா 972.25 என்பது R.PKU.US என்பதாலும் குறிக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு 23, 24 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

23. R.NSKM.UR என்பதால் குறிக்கப்படுவது யாது?

1) ரூபா 6245.75 2) ரூபா 8573.20 3) ரூபா 9735.25

24. ரூபா 3841.97 என்பதைக் குறிக்கப்படுவது யாது?

1) R.MSNQ.YK 2) R.YPNU.KR 3) R.MNYQ.PK

25. 18 cm நீளமும் 6 cm அகலமும் கொண்ட செவ்வக வடிவ பலகைத் துண்டிலிருந்து 3 cm நீளஅளவுடைய எத்தனை சதுரத் துண்டுகளை வெட்டலாம்.

1) 11 2) 10 3) 12

26. நிரை ஒன்றில் A,B,C,D,E ஆகிய 5 நண்பர்கள் அமர்ந்திருந்தனர். அவர்களுள் C யிலிருந்து மூன்றாவதாக Aயும், D யிலிருந்து மூன்றாவதாக Bயும், Cயிற்குப் பின்னால் அடுத்ததாக Dயும், Eயிற்கு முன்னால் Bயும் அமர்ந்திருந்தனர். நிரையில் நடுவில் இருப்பவர் யார்?

1) A 2) B 3) C

27. ஒரு கூடையில் சில பூக்கள் உள்ளன. சிவப்பு நிறப்பூக்களின் இரண்டு மடங்கு இளம் சிவப்பு நிறப்பூக்கள் இருந்தன. இளம் சிவப்பு நிறப்பூக்களின் இரண்டு மடங்கு வெள்ளை நிறப்பூக்கள் இருந்தன. சிவப்பு நிறப்பூக்களின் அரைவாசி ஊதா நிறப்பூக்கள் ஆகும். ஊதா நிறப்பூக்களின் எண்ணிக்கை 15 ஆகும். எனவே, கூடையில் உள்ள வெள்ளை நிறப்பூக்களின் எண்ணிக்கை யாது?

1) 60 2) 30 3) 120

28. ஏதாவது இரண்டு இலக்கங்களை பெருக்கும் போது வரும் விடை அவ் இலக்கங்களை கூட்டும் போது வரும் விடையை விட 1 கூடவாக இருக்கும். அவ்வெண்களை குறித்து நிற்கும் விடை முறையே.

1) 4, 3 2) 2, 3 3) 4, 5

M.P.Kajan

www.lkedu.lk

29. புதுவருடக் கொண்டாடத்தின் போது வழுக்கும் மரம் ஏறும் நிகழ்ச்சியில் ஒருவர் 30 அடி உயரமான கம்பத்தில் 6 அடி ஏறும் போது 2 அடி சறுக்குவார். எனின் கம்பத்தின் உச்சியை எத்தனை பாய்ச்சலில் பிடித்திருப்பார்?

1) 5 பாய்ச்சல் 2) 6 பாய்ச்சல் 3) 7 பாய்ச்சல்

30. அனு, தனு, வினு ஆகியோர் பின்வருமாறு பணம் வைத்திருந்தனர் வினுவிடமுள்ள பணத்திலும் பார்க்க இரு மடங்கு பணம் தனுவிடம் உள்ளது தனுவிடமும் வினுவிடமும் உள்ள பணத்தின் மொத்த தொகை அனுவிடமுள்ள பணத்திறகுச் சமன். தனுவிடமிருந்து ரூபா 10ஐ வினுவிற்குக் கொடுக்கும் போது தனுவிடமும் உளள் பணம் ரூபா 50 ஆகும் மூவரிடமும் உள்ள மொத்தப் பணம் எவ்வளவு?

1) ரூபா 160 2) ரூபா 360 3) ரூபா 240

M.P.Kajan

- நேரடி வகுப்பிற்கு,

VALAKAM INSTITUTE IN WELLAWATTE

RAJESWARI INSTITUTE IN KOTAHENA

- நிகழ்நிலை வகுப்பிற்கு (Zoom),

CONTACT 070 68 68 680

www.kedu.lk

Smart Flex வெளியீடு

தொடர் - 5

தரம் 05
புலமைப் பரிசில் பரீட்சை
நுண்ணறிவு வினாத்தாள் 01
M.P.KAJAN - MODEL PAPERS

Smart Flex

சுட்டெண் :..... 45 நிமிடங்கள்

எல்லா வினாக்களுக்கும் சரியான விடையின் கீழ்க்கோடிடுக

01. 2003 ஆம் ஆண்டு தை 29ம் திகதி சனிக்கிழமை எனின் 2005ஆம் ஆண்டு ஆடி 2ம் திகதி என்ன கிழமை?
    1. திங்கட்கிழமை 2. செவ்வாய்க்கிழமை 3. புதன்கிழமை

02. முரளியின் வீட்டிலிலுள்ள கடிகாரத்தின் நேரம் குறித்த நேரத்திலும் பார்க்க 10 நிமிடங்கள் பிந்தியது. இதற்கேற்ப மு. ப 6.30க்கு வீட்டிலிருந்து புறப்பட்ட முரளி பாடசாலைக்கு சென்ற பொழுது சரியான நேரத்தை காட்டும் பாடசாலை கடிகார நேரம் மு.ப 7.10 ஆக இருந்தது. அவன் வீட்டிலிருந்து பாடசாலைக்கு செல்வதற்கு எடுத்த நேரம் எத்தனை நிமிடங்கள்?
    1. 50 2. 40 3. 30

03. சிங்கமானது மானை துரத்தி வேட்டையாடும். காட்டில் மரங்கள் நேராகவும், சரி இடைவெளியிலும் உள்ளன. சிங்கம் முதலாவது மரத்தின் கீழும் மான் 5வது மரத்தின் கீழும் நிற்கின்றன. சிங்கம் தான் நின்ற இடத்தில் இருந்து நான்காவது மரத்தை அடைய மான் தான் நின்ற இடத்திலிருந்து இரண்டாவது மரத்தை அடைகிறது. இவ்வாறான மாறா வேகத்தில் இரண்டும் ஓடி இருந்தால் எத்தனையாவது மரத்தை அடையும் பொழுது சிங்கம் மானை பிடிக்கும்.
    1. 22 2. 13 3. 17

04. ஒருவர் பின் ஒருவராக வரிசையில் 31பேர் நிற்கின்றோம். இப்பொழுது நான் நிற்கும் இடத்திலிருந்து விலகி எனக்கு முன்னால் நிற்கும் இருவரை கடந்து போய் நிற்கின்றேன். இப்பொழுது நான் நிற்பது வரிசையின் நடுவில் ஆகும். எனவே நான் முன்னர் நின்றது வரிசையில் முன்னால் இருந்து எத்தனையாவது இடத்தில்?
    1. 13வது இடம் 2. 19வது இடம் 3. 22வது இடம்

❖ பின்வரும் தகவல்களைக் கொண்டு 05, 06 ஆகிய வினாக்களுக்கு விடை தருக
- ஒரு குடும்பத்தில் தபீசன், ரதுஷா, நிரேஷ், மாதுரி எனும் நான்கு சகோதர்கள் உள்ளனர்.
- மாதுரிக்கு ஒரு தம்பியும் ஒரு தங்கையும் உண்டு.
- தபீசன் ரதுஷாவின் தம்பி ஆவான்.

05. மாதுரி இக்குடும்பத்தின் எத்தனையாவது பிள்ளை
    1. முதலாவது 2. மூன்றாவது 3. இரண்டாவது

06. நிரேஷின் வயது 18, தபீசனின் வயது 9 எனவே ரதுஷா, மாதுரி ஆகியோரின் வயதுகள் முறையே பின்வரும் எவையாக இருக்கலாம்
    1. 15,12 2. 11,14 3. 19,6

www.lkedu.lk

07. அட்டவணையினை அடிப்படையாகக் கொண்டு விடை தருக

			கொழும்பு
		நீர்கொழும்பு	85
	புத்தளம்	65	150
வவுனியா	45		
யாழ்ப்பாணம்	30	75	

அட்டவணையின் படி சரியான கூற்று யாது?

1. யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா செல்லும் தூரத்தின் இரு மடங்கான தூரம் புத்தளத்திற்கும் நீர் கொழும்பிற்கும் இடையிலான தூரம்
2. யாழ்ப்பாணத்திலிருந்து புத்தளம் வரையான தூரமானது புத்தளத்திலிருந்து கொழும்பு செல்லும் தூரத்தின் அரைவாசி ஆகும்.
3. யாழ்ப்பாணத்திலிருந்து நீர்கொழும்பு செல்லும் ஒருவர் பயணிக்கும் தூரம் 190km ஆகும்.

08. பாடசாலை விழா ஒன்றின் போது மாணவர்கள் பின்வரும் ஒழுங்குமுறையில் நிற்க வேண்டுமென்று அதிபர் கூறினார்.

- முதலாவதாக மாணவ தலைவர் ஒருவரும்
- இரண்டாவதாக உயர்தர மாணவர்
- மூன்றாவதாக இடைநிலைப்பிரிவு மாணவர்
- நான்காவதாக ஆரம்ப பிரிவு மாணவர் இவ் ஒழுங்கில் நிற்குமாறு அனைத்து மாணவர்களிற்கும் கட்டளை இட்டார் எனின் 69 இடத்தில் நிற்கும்
  1. ஆரம்பபிரிவு
  2. மாணவர தலைவர்
  3. உயர்தர வகுப்பு மாணவர்

09. வங்கியொன்றில் 5 வேலையாட்கள் இருந்தனர். 5 நிமிடத்திற்கொருமுறை வாடிக்கையாளர்கள் அவ்ஐவரையும் ஒவ்வொருவர் சந்திக்கமுடியும். காலை 9 மணி தொடக்கம் வேலை ஆரம்பமாகியது. 9.36 மணியயவில் ஒரு வேலையால் காலை உணவு உண்பதற்காக சென்று விட்டார். எனவே 10 மணிவரை எத்தனை வாடிக்கையாளர்கள் வேலையாட்களை சந்தித்திருப்பார்கள்.

1. 60 2. 34 3. 40

10. ஒரு புகையிரத நிலையத்தில் ஒவ்வொரு புகையிரதமும் 30 நிமிடங்களிற்கு ஒரு முறை கடந்து செல்லும் முதலாவது புகையிரதம் காலை 5.30 இற்கு புகையிரத நிலையத்திற்கு வந்தது ஆனால் ஆறாவது புகையிரதம் 10 நிமிடங்கள் தாமதமாக வந்தது. ஆறாவது புகையிரதம் சென்று 25 நிமிடங்களின் பின்பே ஏழாவது புகையிரதம் வந்தது எனின் 7வது புகையிரதம் வந்த நேரம் யாது?

1. மு.ப 8.35 2. மு.ப 8.00 3. மு.ப 9.00

11. போட்டியொன்றில் மதி 25 வினாக்களில் 12 வினாவிற்கும் சுதா 12 வினாக்களில் 6 வினாவிற்கும் கருணாகரன் 8 வினாக்களில் 6 வினாவிற்கும் சரியான விடைகளை கூறினார்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களின் மொத்த வினாக்களிற்கு 100 புள்ளிகள் வழங்கப்பட்டு சரியான வினாக்களிற்கேற்ப புள்ளிகள் வழங்கப்பட்டன. எனின் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர் யார்?

1. மதி 2. சுதா 3. கருணாகரன்

12. இலங்கை எத்தனையாவது சுதந்திரதினத்தை 2017இல் கொண்டாடியது?


1. 68 2. 69 3. 67

www.lkedu.lk

13. இரு எண்களின் கூட்டுத்தொகை 85 ஆகும். இவ்வெண்களுக்கிடையிலான வித்தியாசம் 35 ஆகும். எனின் இதில் பெரிய எண் யாது?
    1. 60 2. 20 3. 75

14. 6 மனிதர்கள் 3 நாட்களில் செய்து முடிக்கும் வேலையை 9 மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பார்கள்?
    1. 6 நாட்கள் 2. 2 நாட்கள் 3. 18 நாட்கள்

15. அம்புக்குறிகளின் மூலம் காட்டப்படும் பாதைகள் வழியே A இலிருந்து B வரைக்கும் செல்வதற்கு மிகத் தூரம் கூடிய பாதையைக் காட்டும் உருவின் கீழ் கோடிடுக



16. வரிசை ஒன்றின் சரி நடுவில் நிற்கும் ஏகன் முன்னாலிருந்து 10 ஆவதாக உள்ளான் எனின் அவ்வரிசையில் உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
    1. 20 2. 19 3. 21

17. 50 இற்கும் 60 இற்கும் இடைப்பட்ட எண்களை எழுதும்போது இலக்கம் 5 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?
    1. 11 2. 10 3. 9

18. கண்ணன் 14 பிஸ்கோத்துப் பெட்டிகளை கடையில் வாங்கி வீட்டிற்கு கொண்டுவரவேண்டி இருந்தது. அவன் ஒரு தடவை 4 பிஸ்கோத்துப் பெட்டிகளை மாத்திரம் கொண்டுவரலாம் இதற்கேற்ப எல்லா பிஸ்கோத்துப் பெட்டிகளை கொண்டுவருவதற்கு அவன் குறைந்தபட்சம் எத்தனை தடவை செல்ல வேண்டும்?
    1. 3 2. 4 3. 5

❖ பின்வரும் தகவல்களை பயன்படுத்தி 19, 20 வினாக்களுக்கு விடை தருக

பானு, கீதா, நசிமா ஆகியோரிடமுள்ள இனிப்புகளின் எண்ணிக்கை பற்றிய விபரங்கள்

- மூவரிடமுள்ள இனிப்புகளின் எண்ணிக்கை சமமானவை அன்று
- ஒவ்வொருவரிடமும் 25 இற்கு குறையாத இனிப்புகள் உண்டு
- எல்லோரிடமும் இரட்டை எண் எண்ணிக்கையான இனிப்புகள் உண்டு
- பானுவிடமும் கீதாவிடமும் உள்ள மொத்த இனிப்புகள் 62
- மூவரிடமுள்ள மொத்த இனிப்புகளின் எண்ணிக்கை 100

19. நசிமாவிடம் உள்ள இனிப்புகளின் எண்ணிக்கை யாது?
    1. 28 2. 32 3. 38

20. பானுவிடம் 28 இனிப்புகள் இருப்பின் கீதாவிடம் எத்தனை இனிப்புகள் இருக்கக்கூடும்?
    1. 22 2. 30 3. 34

21. எனது அண்ணா தன்னிடம் இருந்த ஒரு தொகை மாபிள்களில் 1/2 பங்கை எனக்குத் தந்தார். பின்னர் எஞ்சியதில் 1/2 பங்கை தங்கையிடம் கொடுத்தார். தற்போது எஞ்சியிருப்பது 9 மாபிள்களாகும். முதலில் அண்ணனிடம் இருந்த மொத்த மாபிள்கள் எத்தனை?
    1. 18 மாபிள்கள் 2. 36 மாபிள்கள் 3. 72 மாபிள்கள்

M.P.Kajan

www.lkedu.lk

22. மதுரா ரூபாய் 5.00 பெறுமதியான முத்திரைகளையும் ரூபாய் 8.00 பெறுமதியான முத்திரைகளையும் சம எண்ணிக்கையில் வாங்கினான் அவற்றின் மொத்தப் பெறுமதி ரூபாய் 78.00 எனின் அவன் வாங்கிய மொத்த முத்திரைகளின் எண்ணிக்கை யாது?
    1. 14 2. 12 3. 6

23. ஓர் ஓட்டப்பந்தயத்தில் மாலாவை விட ராதா முன்னே ஓடினாள் ரஜிவை விட ராதா முன்னே ஓடினாள் ரஜிவை விட அமலி முன்னே சென்றாள். ஆனால் ராதாவிற்கு பின்னாலேயே அமலி ஓடினாள் எனின் இவ் ஓட்டப் பந்தயத்தில் 1ஆம் இடம் பெறுபவர் யார்?
    1. அமலி 2. ராதா 3. ரஜி

24. கிணறு ஒன்றை வெட்ட 4 மனிதர்களுக்கு 8 நாட்கள் தேவை என கணிக்கப்பட்டது. எனவே அக்கிணற்றை 4 நாட்களில் வெட்டி முடிக்க எத்தனை மனிதர்கள் தேவை?
    1. 8 2. 6 3. 4

25. என்னிடம் பெட்டியொன்றுள்ளது. அப்பெட்டியினுள் சிறிய பெட்டிகள் நான்கு உள்ளன. அச்சிறிய பெட்டிகள் நான்கினுள் இன்னும் மூன்று பெட்டிகள் வீதம் உள்ளன எனின் என்னிடம் காணப்படும் மொத்த பெட்டிகள் எத்தனை?
    1. 20 2. 17 3. 8

26. 500cm நீளமுள்ள ஒரு கயிற்றின் நடுவில் 115cm நீளமுள்ள பகுதி சேதமடைந்தள்ளது. அப்பகுதியை அகற்றி மீதி இரு துண்டுகளும் 10cm வீதம் ஒன்றின் மீது ஒன்று வைத்து ஒட்டப்பட்டன. தற்போது கயிற்றின் நீளம் யாது ?
    1. 380cm 2. 385cm 3. 375cm

- பின்வரும் தகவல்களை பயன்படுத்தி 27, 28 வினாக்களுக்கு விடை தருக

    கமல், விமல், அமல் ஆகியோரிடமுள்ள இனிப்புகளின் எண்ணிக்கை பற்றிய விபரங்கள்
    மூவரிடமுள்ள இனிப்புகளின் எண்ணிக்கை சமமானவை அன்று
    ஓவ்வொருவரிடமும் 25 இற்கு குறையாத இனிப்புகள் உண்டு
    எல்லோரிடமும் இரட்டை எண் எண்ணிக்கையான இனிப்புகள் உண்டு
    கமலிடமும் விமலிடமும் உள்ள மொத்த இனிப்புகள் 62
    மூவரிடமுள்ள மொத்த இனிப்புகளின் எண்ணிக்கை 100

27. அமலிடம் உள்ள இனிப்புகளின் எண்ணிக்கை யாது?
    1. 28 2. 32 3. 38
28. கமலிடம் 28 இனிப்புகள் இருப்பின் விமலிடம் எத்தனை இனிப்புகள் இருக்கக்கூடும்?
    1. 22 2. 30 3. 34

29. குமரன் ஒரு லீற்றர் தேங்காய் எண்ணெய் வைத்திருந்தான். அவன் 75 மில்லிலீற்றர் கொண்ட பல சிறிய போத்தல்களில் நிரப்பிக் கொண்டிருந்தான். கடைசிப் போத்தல் குறையாக இருந்தது. அதனைப் பூரணமாக்குவதற்கு தேவையான தேங்காய் எண்ணெயின் அளவு யாது?
    1. 40மில்லிலீற்றர் 2. 25மில்லிலீற்றர் 3. 50மில்லிலீற்றர்

30. ஆதவனிடம் இருந்த மாபிள்களை விட 35 கூடுதலாக கரனிடம் இருந்தது. குரன் 25 மாபிள்களை ஆதவனுக்குக் கொடுத்தால்,ஆதவனிடம் உள்ள மாபிள்களின் எண்ணிக்கை கரனிடம் உள்ள எண்ணிக்கையின்
    1. ஐந்தினால் கூடியது
    2. பத்தினால் கூடியது.
    3. பதினைந்தினால் கூடியது.

M.P.Kajan